**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.301/2017**

Date: 18.10.2023.

PW-1 சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 and A2 Present.**

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது கணவர் காட்டு வேலை செய்து வந்தார். எனது கணவர் இரும்பு பட்டறையும் வைத்திருந்தார் என்றால் கத்தி, கொடுவாள், களை கொத்தி போன்றவற்றை செய்து கொடுப்பார். அந்த பட்டறையில் யாரெல்லாம் வேலை செய்தார்கள் என்றால் நானும் என் கணவரும் வேலை செய்தோம்.

எனது வீட்டிற்கு பக்கத்தில் மாரமங்கலம் என்ற ஊர் இருக்கிறது. மாரமங்கலத்திலிருந்து ஒரு மண் ரோடானது எங்களது வீட்டின் வழியாக 1ம் எதிரியின் வீட்டிற்கு போகிறது என்றால் சரிதான். எங்கள் வீட்டில் இருந்து மேடு ஏறித்தான் 1ம் எதிரியின் வீட்டிற்கு போக முடியும் என்றால் சரிதான். அந்த மண் ரோட்டிற்கு மேற்கு பக்கம் எங்களது காடு இருக்கிறது என்றால் சரிதான்.

வழக்கு சம்பவ சமயத்தில் அந்த காட்டில் கேழ்வரகு பயிர் செய்து இருந்தோம் என்றால் சரிதான். அந்த மண் ரோட்டிற்கு கிழக்கே காளியம்மன் கோயில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த காளியம்மன் கோயிலின் பின்புறம் ஒரு வீடு இருக்கிறது என்றால் சரிதான். நாங்கள் கேழ்வரகு பயிர் செய்திருந்த மேற்படி காட்டிற்கு வடக்கே 2ம் எதிரியின் சவுக்கு தோட்டம் இருக்கிறது என்றால் சரியல்ல.

அந்த மண் ரோட்டிற்கு பக்கத்தில்தான் எங்களது கொல்லம் பட்டறை இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி கேழ்வரகு பயிர் செய்திருந்த காடானது பிரிக்கப்படாத சொத்து என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் எனது கணவருக்கு தனியாக 1 1/2 ஏக்கர் நிலம் தனியாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரிக்கும் தனியாக 1 1/2 ஏக்கர் நிலம் தனியாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

கீழே இருந்து பார்த்தால் மேட்டில் உள்ள 1ம் எதிரியின் வீடு தெரியாது என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் என்னிடம் போன் கிடையாது. அந்த சமயத்தில் எங்களிடம் எந்த வாகன வசதியும் கிடையாது. அன்றைய தினம் மேற்படி பட்டறையில் நான், என் கணவர், என் மகள் தீபா, அவரது கணவர் தங்கராஜ் ஆகியோர் இருந்தோம். அவர்களிடமும் வாகனங்கள் எதுவும் இல்லை.

சம்பவம் நடந்த உடன் அது தொடர்பாக நான் எனது கொழுந்தனார் குமார் என்பவருக்கு பக்கத்தில் இருந்த ஒரு நபரின் போன் மூலம் தகவல் கொடுத்தோம். குமார் சம்பவம் தொடர்பாக காவல் துறைக்கு தகவல் கொடுத்திருக்கிறார். யாரிடமிருந்து போனை பெற்று குமாருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் அவரது பெயர் தற்போது தெரியவில்லை. பக்கத்தில் நிறைய பேர் காட்டு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

சம்பவ இடத்திற்கு போலீசார் அரை மணி நேரத்தில் வந்து விட்டார்கள். போலீசார் அங்கிருந்தவர்களை விசாரித்தார்கள். துப்பாக்கி சத்தம் கேட்டு அனைவரும் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் வந்து உடனடியாக பிரேதத்தை அங்கிருந்து எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். என் கணவரை நான் சென்று தூக்கி பார்த்தேனா என்றால் என்னால் பக்கத்தில் போக முடியவில்லை. 1ம் எதிரி துப்பாக்கியை காட்டி யாராவது பக்கத்தில் வந்தால் சுட்டு விடுவேன் என்று மிரட்டியதால் நான் பக்கத்தில் போக முடியவில்லை என்று சாட்சி சுயமாக சொல்கிறார்.

நான் கீழே இருந்தேன். சம்பவமானது மேட்டில் நடந்தது. நான் நின்ற இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 500 அடி தொலைவு இருக்கும். சம்பவம் 1ம் எதிரியின் வீட்டிற்கு முன்பாக நடந்தது. போலீசார் என் கணவரை எந்த வண்டியில் கொண்டு சென்றார்கள் என்றால் ஏற்காடு பாய் வீட்டு வண்டியில் கொண்டு போனார்கள். போலீசார் அங்கு வருவதற்கு முன்பாகவே பாய் வீட்டு வண்டியானது சம்பவ இடத்திற்கு வந்துவிட்டதா என்றால் இல்லை.

சுடப்பட்டவுடன் என் கணவர் மேட்டுப் பகுதியில் இருந்து உருண்டு கீழே வந்து விட்டாரா என்றால் இல்லை. சுடப்பட்ட இடத்திலேயே விழுந்து கிடந்தார். சம்பவ இடத்திற்கும் 1ம் எதிரியின் வீட்டிற்குமிடையே 2 அடி தொலைவு இருக்கும். (சாட்சி நீதிமன்றத்திற்கு காட்டக்கூடிய தூரம் சுமார் 15 முதல் 20 அடி தொலைவு). நான்

சம்பவத்தை எங்களது கொல்லப்பட்டறையில் இருந்து பார்த்தேன்.

எனக்கு எழுதப் படிக்க தெரியாது. சம்பவ இடத்திலிருந்து நான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன் என்றால் சரிதான். போலீசாரும் அங்கு வந்து மருத்துவரிடம் என்ன ஆனது என்று கேட்டார்கள் என்றால் சரிதான். காவல் ஆய்வாளரும் அங்கு வந்தார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு காவல் நிலையம் சென்றேன்.

போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்தும், சம்பவ இடத்தில் வைத்தும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு போலீசார் எனது உறவினர் ஒருவரிடமிருந்து புகார் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். முதலில் என்னிடமிருந்து வாங்கப்பட்ட வாக்குமூலங்கள் வேண்டாம் என்று போலீசார் சொல்லிவிட்டு பின்னிட்டு என் உறவினரிடமிருந்து புகார் வாங்கி கொண்டார்கள் என்ற கேள்விக்கு சாட்சி எனக்கு சரியாக புரியவில்லை என்று சொல்கிறார்.

போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் நாங்கள் சொல்வது போல் புகார் கொடுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அப்போதே 1ம் எதிரியையும் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விட்டார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரியிடம் போலீசார் என்ன நடந்தது என்று கேட்டுவிட்டு அதற்கு பிறகுதான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் எதிரியிடமும் போலீசார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்களா என்றால் வாங்கியிருக்கலாம். அது பற்றி எனக்கு தெரியவில்லை.

கொல்லப்பட்டறையில் என் கணவர் துப்பாக்கி செய்து கொடுப்பார் என்றால் சரியல்ல. துப்பாக்கியை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கொல்லப்பட்டறையில் இருந்து எங்களது வீடு சுமார் 30 அடி தூரத்தில் இருக்கிறது. கொல்லப்பட்டறையில் இருந்து என் கணவர் எதற்காக 1ம் எதிரியின் வீட்டருகே சென்றார் என்றால் அன்றைய தினம் நான் எனது மகள் தீபாவின் மகனை மடியில் உட்கார வைத்துக் கொண்டிருந்தேன் அதனை பார்த்த என் கணவர் என்னிடம் எதற்காக விவசாய வேலை பார்க்காமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறாய் என்று என்னை சத்தம் போட்டு அடிக்க வந்தார்.

அதனை பார்த்த 1ம் எதிரியின் மனைவி என் கணவர் அவரைத்தான் திட்டுகிறார்

என்று நினைத்து கொண்டு என் கணவரை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டினார். நான் அதற்கு 1ம் எதிரியின் மனைவி ராமாயியிடம் என் கணவர் என்னைத்தானே திட்டிக் கொண்டிருக்கிறார் எதற்காக நீ சத்தம் போடுகிறாய். என்று கேட்டு எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ராமாயி என் கணவரை பார்த்து வாடா தேவடியா பையா என்று கூப்பிட்டார். அதனை கேட்டு என் கணவர் எதிரியின் வீட்டருகே சென்றார்.

அந்த சமயத்தில் என் கணவர் மது அருந்தியிருந்தார் என்றால் சரியல்ல. ராமாயியும் நானும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த போது என் கணவர் ஜட்டியோடு மேலே சென்று விட்டார் என்றால் சரிதான். வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த போது துப்பாக்கி சத்தம் கேட்டு நான் மேலே பார்த்தேன் என்றால் சரிதான். நான் பார்த்த போது என் கணவர் கீழே விழுந்துவிட்டார் என்றால் அதே இடத்திலேயே விழுந்து விட்டார்.

துப்பாக்கு சத்தம் கேட்பதற்கு முன்பாக என் கணவரும் 1ம் எதிரியும் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்றால் வாக்குவாதம்தான் செய்தார்கள். அப்போது தள்ளு முள்ளு நடந்தது என்றால் சரிதான். அவர்கள் இருவரும் கட்டி உருண்டார்கள் என்றால் சரியல்ல. ராமாயி என்னிடம் வாக்குவாதம் செய்தார் என்ற சங்கதியை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என் கணவர் எதிரியின் வீட்டருகே சென்றார் என்ற சங்கதியை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்த போது இரவு 02.00 மணி என்று சாட்சி சுயமாக சொல்கிறார். நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே 1ம் எதிரியை போலீசார் ஏற்காட்டிலிருந்து சேலத்திற்கு அழைந்து வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் மருமகன் தங்கராஜ் ஏற்காடு காவல் நிலையத்திற்கு வந்து விட்டார் என்றால் சரிதான்.

என் மருமகன் மாரமங்கலம் குடியிருப்பு பகுதியில் வசிக்கிறார். சத்தம் கேட்டுதான் அவரும் வந்தார் என்றால் சரியல்ல. அவர் 08.00 மணிக்கே எங்களது வீட்டிற்கு வந்துவிட்டார். தங்கராஜிடம் போன் இருந்ததா என்றால் சம்பவ சமயத்தில் இல்லை. தற்போது வைத்திருக்கிறார். போலீசார் வருவற்கு முன்பாகவே 1ம் எதிரி அங்கிருந்து போய் விட்டார் என்றால் சரிதான். 1ம் எதிரி அங்கிருந்து போனதற்கு

பின்னிட்டு நான் சென்று என் கணவரை தொட்டு பார்த்தேன். உயிர் இல்லை.

என் உடையிலும் ரத்தக் கறை ஆகிவிட்டது. அந்த உடைகளை நான் வாடை அடித்ததால் எரித்துவிட்டேன். என் கணவர் மது அருந்திவிட்டு தகராறு செய்ததால்தான் சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அதனால்தான் என் கணவர் ஜட்டியுடன் 1ம் எதிரியின் வீட்டருகே சென்றால் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது பயன்படுத்தியாக கூறப்படும் துப்பாக்கி என் கணவரால் அவரது பயன்பாட்டிற்காக எங்களது கொல்லப்பட்டறையில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

சம்பவத்தின் போது தன்னை பாதுக்காத்து கொள்வதற்காக என் கணவர் கையில் வைத்திருந்த துப்பாக்கியை 1ம் எதிரி மடக்கியபோது அது தவறுதலாக என் கணவர் சுட்டதால் அவரது தொடையில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அந்த காயத்தினால் என் கணவர் மேட்டுப்பகுதியில் இருந்து உருண்டு கீழே விழுந்ததன் காரணமாகத்தான் மற்ற காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

என் கணவர் மது போதையில் ஜட்டியுடன் 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றதுதான் இவ்வழக்கு சம்பவத்துக்கான மூலம் காரணம் என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்தை மறைத்து பொய்யான சங்கதிகளை சொல்லி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ராமாயிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த போது 1ம் எதிரி கத்தியை எடுத்துக் கொண்டு வந்தார் என்றால் சரியல்ல. துப்பாக்கியைத்தான் எடுத்துக் கொண்டு வந்தார்.

1ம் எதிரி துப்பாக்கியை கொண்டு வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது கொல்லப்பட்டறையில் சட்ட விரோதமாக துப்பாக்கிகள் செய்ததை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- **G. Sri Rama Jeyam**
III Additional District Judge,
Salem.